# காகங்கள் அவன் பக்கத்தில் வந்து, அவனுக்கு பரிமாறின



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

# *செய்தி:* தேவனால் அருளப்பட்ட பாதை, டிசம்பர் 1, 1953

173. ஒருசமயம் எலியா என்ற பெயருடைய ஒரு மனிதன் இருந்தான். கர்த்தர் அவனிடம், "நான் இந்த தேசத்தின்மேல் நியாயத்தீர்ப்பை அனுப்பப் போகும் அளவுக்கு, இந்த தேசம் மிகவும் பாவமுள்ளதாயிருக்கிறது. ஆனால் எலியாவே, நான் உனக்காக தப்பிக்கொள்ளும்படியான ஒரு வழியை ஏற்படுத்தப் போகிறேன்" என்றார்.

174. "கர்த்தாவே நீர் என்ன செய்யப் போகிறீர்?"

175. "நீ அங்கே மேலே போய், அதோ அங்கே அந்த மலையின் உச்சியிலுள்ள, கேரீத் என்ற சிறு குளத்தண்டையில் இரு."

176. எலியா வீதியினூடாக நடந்து சென்று, "நல்லது, இப்பொழுது, நான் மழைக்காக அழைப்பது வரையில், மழை பெய்யப் போவதில்லை. நான் அதோ அங்கே மேலே போய், அந்த மலையின் மேல் இருக்கப் (போகிறேன்)" என்றான்.

177. மழையில்லாமல் (வறட்சி) ஏற்பட்டபோது, அந்த ஜனங்கள் வீட்டிற்கு வந்து, "அங்கே மேலே தண்ணீர் இல்லாதிருக்கும் போது, அங்கே மேலே அந்த மலையின் உச்சியிலிருக்கிற அந்தச் சிறு பழைய நீரூற்றண்டையில் உட்கார்ந்து கொண்டிருக்கிற அந்தப் பைத்தியக்கார பித்து கொள்ளி கிழவனைப் பாருங்கள்" என்று கூறிக்கொண்டிருப்பதை உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகிறதா. ஆனால் தேவனோ அதைத் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்திக்கொண்டிருந்தார் (kept it running). அவர் அவ்வாறு செய்வதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆமாம், அவன் மேலே மலையின் உச்சியில் இருந்தான். "அந்தக் கிழவன் அங்கு மேலேயே காய்ந்து போய்விடுவான் என்று பந்தயம் கட்டுகிறேன்" என்றார்கள்.

178. இல்லை, இல்லை, இல்லை, அவன் அப்படியே... செய்து கொண்டிருந்தான். அவன் தேவனால் அருளப்பட்ட வழியை எடுத்துக்கொண்டான். தேவன், "நீ அங்கே மேலே போய், இரு, ஏனென்றால் உன்னைப் போஷிக்க நான் ஏற்கனவே காகங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறேன்" என்றார்.

179. அவர்கள், “அந்தப் பரிதாபமான கிழட்டு பித்து கொள்ளி அங்கே மேலே இருந்து பட்டினி கிடந்து செத்து விடுவான்” என்று கூறினார்கள்.

180. நல்லது, அவனோ மிக நல்ல நிலையில் இருந்து கொண்டிருந்தான். இன்றிரவு இங்கேயிருக்கும் உங்களில் நிறைய பேர் - ஏராளமானோரைக் காட்டிலும் அவன் மிக நல்ல நிலையில் இருந்தான் என்று நான் பந்தயம் கட்டுகிறேன். அவனுக்கு சேவை செய்ய, அவனுக்குச் சில கறுப்பின வேலைக்காரர்கள் இருந்தார்கள். உங்களுக்கு அது இல்லை என்று நான் பந்தயம் கட்டுகிறேன். ஆம், ஐயா. காகங்கள் அவன் பக்கத்தில் வந்து, அவனுக்கு பரிமாறின. அது சரிதானா? அது சரியே. அவனுக்கு கறுப்பின சுமை தூக்குபவர்கள் இருந்தார்கள், உங்களில் பாதிபேருக்கு அது இல்லை. அவைகள், அந்தக் காகங்கள் அருகில் வந்து, அவனுக்குப் பணி புரிந்துவிட்டு, அவைகள் கடந்து சென்றன.

181. சமீபத்தில் ஏதோவொரு பிரசங்கியார், “பில்லி, அந்தக் காகங்கள் அந்த மனிதனுக்கு ஆகாரத்தைக் கொண்டு வந்தது என்று நீர் நம்புவதாகவா என்னிடம் சொல்ல வருகிறீர்?” என்று கேட்டார்.

182. அதற்கு நான், “அவ்வாறு தான் வேதாகமம் கூறுகிறது. நான் அதை விசுவாசிக்கிறேன்” என்றேன். ஆமாம்.

183. “நான் உம்மிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்க விரும்புகிறேன். இந்த உலகத்திலே அந்தக் காகங்களுக்கு எப்படி சான்ட்விச்சுகள் கிடைத்து, அதை எலியாவிடம் கொண்டு வந்தன?” என்று கேட்டார்.

184. நான், “எனக்குத் தெரியாது. ஒரே காரியம் என்னவென்றால்: காகங்களுக்கு அது கிடைத்து, அவை அதைக் கொண்டு வந்தன; எலியா அதைப் பெற்றுக்கொண்டான்; அதோடு அது முடிவுபெறுகிறது. இப்பொழுது சரியாக இதைப்போன்று, எது என்னை இவ்விதம் நடந்து கொள்ளச் செய்கிறது என்று என்னால் உம்மிடம் கூற முடியாது, எனக்குத் தெரிந்த ஒரே காரியம் என்னவென்றால்: தேவன் அதைப் போதித்திருக்கிறார்; வேதாகமம் அவ்வாறு கூறுகிறது; பரிசுத்த ஆவியானவர் அதைக் கொண்டு வந்தார்; நான் அதைப் பெற்றுக்கொண்டேன்; நான் அப்படியே ஒரு நல்ல நேரத்தை உடையவனாயிருக்கிறேன்” என்றேன்.

185. அது எப்படி வருகிறது என்று எனக்குத் தெரியாது. நான் அப்படியே... அது அப்படியே இங்கேயிருக்கிறது. அல்லேலூயா! எனக்குத் தெரியாது. தேவன் அவ்வாறு கூறியுள்ளார், எனவே நான் அப்படியே - நான் அப்படியே அதைப் புசிக்கிறேன். பரிசுத்த ஆவியானவர் அதைக் கொண்டு வருகிறார், நான், "ஆம், கர்த்தாவே" என்று கூறுகிறேன்.

186. "நல்லது, அவர்கள் உம்மை ஒரு பரிசுத்த உருளை என்று அழைக்கப் போகிறார்கள்."

187. "எனக்குக் கவலையில்லை, ஆண்டவரே. நான் அப்படியே அதை நேசிக்கிறேன். அது அப்படியே நன்றாக உள்ளது. நான் அப்படியே தொடர்ந்து புசித்துக்கொண்டே இருக்கிறேன். அதைக் கீழே அனுப்பும்." ஆமென். "அந்த இறைச்சி இடையீட்டு அப்பத்தில் (sandwich) ஒரு பெரிய கடியை எனக்குக் கொடும்." அவ்வளவு தான்.

188. அவர்கள், "ஒ, என்னே, ... கண்டுபிடிக்க முயற்சிக்கும்படியாக, அங்கே சுற்றிலும் வலைவீசித் தேடிக்கொண்டிருக்கிறோமே" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது.

189. அந்த வயதான பிரசங்கியோ அங்கே மேலே உட்கார்ந்து கொண்டிருந்தான், மத வெறியன் என்று கருதப்பட்ட அவன், ஒரு காரியத்தையும் குறித்து கவலைப்படாதவனாக உட்கார்ந்திருந்தான். பாருங்கள்? அவன் நாள் முழுவதும் அங்கே உட்கார்ந்திருந்து, "ஓ கர்த்தாவே, நான் உம்மை நேசிக்கிறேன். கர்த்தருக்கு துதி உண்டாவதாக. தேவனே, நான் உம்மைத் துதிக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

190. காகமானது அருகில் வந்து, "எலியாவே, இங்கே இருக்கிறாயா" என்றது.

191. அவன் இந்த மகத்தான பெரிய இறைச்சி இடையீட்டு அப்பத்தை (சான்விச்) எடுத்துக்கொண்டு, "ஓ, என்னே" என்றான். அங்கே கீழே அந்த பேர்வழிகளோ தங்கள் பேச்சினாலே கோபத்தால் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தார்கள்... இவனோ அப்படியே சிற்றாற்றில் இறங்கி, அவனுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டுமோ அதைக் குடித்தான், இருப்பினும் அவன், "பைத்தியக்காரன் (crazy)" என்று அழைக்கப்பட்டான்.


192. அது அந்தவிதமாகத்தான் இருக்கிறது, சகோதரனே. நாம் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிற காரணத்தினால், நாம் பைத்தியம் பிடித்தவர்கள் என்று எண்ணிக்கொள்கிறார்கள். சகோதரனே, நாமோ தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக பீறிட்டுப் பாய்கிற, ஒருபோதும் தீர்ந்துபோகாத நித்திய ஜீவத்தண்ணீர்களை உடைய ஒரு நீரூற்றிலிருந்து பருகிக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக, அதுவே தேவனால் அருளப்பட்ட வழியாக இருக்கிறது. நிச்சயமாக, அவ்வாறுதான்.

193. உங்கள் சபையில் சேர்ந்து, உங்கள் பிரசங்கியாரோடு கரங்களைக் குலுக்க முயற்சிக்க வேண்டாம். தேவனோடு சரிப்படுத்திக் கொள்ளுங்கள். அல்லேலூயா! அதைச் செய்ய வேண்டிய வழி அதுதான், அதைச் செய்வதற்கு உங்களுக்காக தேவனால் அருளப்பட்ட பாதை அதுதான். நீங்கள் வெறுமனே விசுவாசிப்பீர்களானால், தப்பிக்கொள்ளும்படியாக, ஒவ்வொரு முறையும், அவர் ஒரு வழியை உண்டாக்குவார். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? ஆம், ஐயா. அவர் எலியாவுக்காக தப்பிக்கொள்ளும்படியான ஒரு வழியை உண்டுபண்ணினார்.

★★★★★

(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)




LAJOS
SEGNER

